ந.க.எண்._அ2/9300/2020

அணி ஆணை: 830/2021

தளவாய் அலுவலகம்.
த.சி.கா முதலணி, திருச்சி
நாள்: 21.04.2021.

**பணிவரன்முறை - ஆணை**

பொருள் : காவல் - த.சி.கா. முதலணி, திருச்சி – அமைச்சுப்பணியாளர் - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் நேரடியாக இளநிலை உதவியாளராக தேர்வு செய்யப்பட்ட திருமதி.S.ரமலான் கனி என்பவரை இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைப்படுத்துதல் - தொடர்பாக.

பார்வை : 1) செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண். 2458/பி.எஸ்.டி-1/2020, நாள். 28.05.2020.
2) காவல்துறை தலைமை இயக்குநர், தமிழ்நாடு, சென்னை அவர்களின் பணி நியமன ஆணை ந.க.எண். 550316/என்.ஜி.பி. 2(2)/2020, நாள். 05.08.2020
3) இவ்வணி அலுவலக பணி நியமன ஆணை எண் 968/2020 ந.க.எண். அ2/9300/2020, நாள்.14.08.2020

ஆணை

பார்வை 01 மற்றும் 02-ல் காணும் ஆணைகளின் படி, திருமதி.S.ரமலான் கனி என்பவர் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் 2018-2019 மற்றும் 2019-2020-ம் ஆண்டுக்கான இளநிலை உதவியாளர் காலிப்பணியிடங்களில் தொகுதி-4 (Group-IV) தேர்வின் மூலம் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்டு, பார்வை 03-ல் காணும் இவ்வலுவலக ஆணையின்படி இவ்வணி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக (Group-IV) 17.08.2020 அன்று முற்பகல் பணிக்கு அறிக்கை செய்து பணிபுரிந்து வருகிறார். இவர் இளநிலை உதவியாளராக (Group-IV)-ல் பணிக்கு அறிக்கை செய்த நாளான 17.08.2020 முற்பகல் முதல் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

**நிபந்தனைகள்**

(i) இப்பணிவரன்முறை 2018-2019 மற்றும் 2019-2020-ம் ஆண்டுக்கான (Group-IV) பணி தேர்வு தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ள வழக்குகளின் இறுதி நீதிமன்ற தீர்ப்பிற்குட்பட்டது.

(ii) மேலும், இவர் பணி ஏற்பு செய்த நாளான 17.08.2020 முற்பகல் முதல் மூன்று ஆண்டு கால தொடர்ச்சியான பணிக்காலத்தில் இரண்டு ஆண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். மேலும், தகுதிகாண் பருவ காலத்தில் பவானிசாகர் அடிப்படை பயிற்சி தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

ஓம்/- மு.ஆனந்தன்,
தளவாய்,
த.சி.கா முதலணி, திருச்சி.

பெறுநர்

திருமதி.S.ரமலான் கனி, இளநிலை உதவியாளர், த.சி.கா முதலணி, திருச்சி-12.

நகல்: காவல்துறை தலைமை இயக்குநர், தமிழ்நாடு, சென்னை-04.
நகல்: கூடுதல் காவல்துறை இயக்குநர், ஆயுதப்படை, சென்னை-10.
நகல்: காவல்துறை தலைவர், ஆயுதப்படை, சென்னை/திருச்சி.
நகல்: அனைத்து பிரிவு கண்காணிப்பாளர்கள், த.சி.கா முதலணி, திருச்சி.
நகல்: அனைத்து பிரிவு கண்காணிப்பாளர்கள் / இளநிலை உதவியாளர், த.சி.கா முதலணி, திருச்சி.
நகல்: "அ3", "பி1", "டி2" உதவியாளர்கள் / இளநிலை உதவியாளர், த.சி.கா முதலணி, திருச்சி.
நகல்: அணி ஆணை புத்தகம்/ உதிரி.
நகல்: இருப்புக்கோப்பு.

// உ.ந.உ.ப.அ //

நிர்வாக அதிகாரி

22/04/2021